**TNPSC-சமச்சீர் கல்வி புத்தகத்தில் 9 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரையுள்ள இலக்கணக் குறிப்புகள் முழுவதும்**

**வினையாலணையும் பெயர்**

முருகன் பரிசு பெற்றான்.
பரிசு பெற்றானைப் பாராட்டினர்.

இவ்விரு தொடர்களிலும் பெற்றான் என்னும் வினைச்சொல் வந்துள்ளது.

முதல் தொடரிலுள்ள "பெற்றான்" என்பது, முருகன் என்னும் எழுவாய்க்குப் பயனிலையாக வந்துள்ளது.

இரண்டாவது தொடரிலுள்ள "பெற்றானை" என்பது முருகனைக் குறிக்கும் பெயராக வந்துள்ளது.

இவ்வாறு வினைமுற்று வினையைக் குறிக்காமல் வினைசெய்தவரைக் குறிப்பது வினையாலணையும் பெயர் எனப்படும். இது வினைக்குரிய காலம் காட்டும். பெயர்க்குரிய வேற்றுமை உருபுகளையும் ஏற்று வரும்.

பெற்றானை – இறந்த காலம்.

பெற்றானை – நிகழ் காலம்.

பெற்றானை – எதிர்காலம்.

பெற்றான் + ஐ என, இரண்டாம் வேற்றுமை உருபான ஐ ஏற்று வந்துள்ளமை காண்க.

**வினையாலணையும் பெயர்:**

1] அகழ்வார், 2] இகழ்வார், 3] ஒறுத்தார், 4] பொறுத்தார், 5] செய்தாரை, 6] இறந்தார், 7] துறந்தார், 8] வேண்டாரை, 9] நோற்கிற்பவர், 10] கேட்டான், 11] வாட்டான், 12] சார்ந்தவர், 13] அஞ்சான், 14] பற்றுவான், 15] மேற்கொள்பவர், 16] ஆற்றுவார், 17] மாற்றார், 18] சான்றவர், 19] உடையான், 20] உரவோர், 21] வந்தவர், 22] பெற்றியார், 23] சூழ்வார், 24] தக்கார், 25] செற்றார், 26] துணையார், 27] ஆள்வார், 28] பிரிந்தோர், 29] வந்தவர், 30] போனவர், 31] தெரிவார், 32] துடைத்தவர், 33] கொன்றார், 34] உய்ப்பது, 35] அஞ்சுவது, 36] ஆய்ந்தவர், 37] மாண்டார், 38] அஞ்சினர், 39] எண்ணிய, 40] காத்தார், 41] தருவார், 42] கேட்டனர், 43] கல்லார், 44] அறிவிலாதார், 45] உடையான், 46] உரவோர், 47] ஒல்கார், 48] உள்ளியவர், 49] கருதுபவர், 50] தீர்ந்தோன், 51] மடிந்தோர், 52] இழந்தோர், 53] வில்லினன், 54] பண்ணவன், 55] பரிவினன், 56] அருந்தியன், 57] நறத்தான், 58] நின்றார், 59] காய்ந்தார், 60] அறியாதவர், 61] சூழ்வார், 62] தக்கார, 63] செற்றார், 64] துணையார், 65] ஆள்வார், 66] பெற்றியார், 67] இயற்றியார், 68] இல்லார், 69] செய்வான், 70] போற்றார், 71] அலந்தார், 72] புணர்ந்தார், 73] உணர்த்துவான், 74] வந்தவர்,

**எதிர்மறை வினையாலணையும் பெயர்:**

1] இல்லாதவர்

**வினையெச்சம்:**

1] உண்ணாது, 2] நொந்து, 3] பொதிந்து, 4] போற்றி, 5] கடந்து, 6] பாய்ந்து, 7] செறிந்து, 8] விழுந்து, 9] சிறந்து, 10] சொல்லி, 11] இறைஞ்சி, 12] ஓடி, 13] இளைத்து, 14] எனா, 15] கூர, 16] குறுகி, 17] சேவிக்க, 18] பொழிந்திழிய, 19] கொளல், 20] தொழுது, 21] அறைகுவேன், 22]
செயின், 23] உள்ள, 24] செல, 25] அதிர, 26] எய்தி, 27] கண்டு, 28] களங்காது, 29] துளங்காது, 30] கடிந்து, 31] கண்டுளி ( கண்டபோது ),32] பரிந்து, 33] அறிந்து, 34] புகுந்து, 35] ததும்பி, 36] வெதும்பி, 37] ஓம்பி, 38] தெரிந்து, 39] வளைத்து, 40] புதைத்து, 41] அறிய, 42] குவிய,
43] இழிய, 44] பொலிய, 45] இன்றி, 46] காழ்ப்ப, 47] புரள, 48] கடந்து, 49] அடைந்து, 50] தொழுது, 51] நிமிர்நது, 52] மடித்து, 53 வீழ்ந்து, 54] கலங்கி, 55] நடந்து , 56] கனிந்து , 57] உரைத்து, 58] பொருந்தி, 59] எழுந்து, 60] வணங்கி, 61] பொழிந்திழிய, 62] ஆக்கிநோக்கி, 63]
தேர்ந்து, 64] புடைத்து, 65] கிடந்து.

**எதிர்மறை வினையச்சம்:**

1] செய்யாமல், 2] உண்ணாது, 3] கலங்காது.

**எதிர்கால வினையெச்சம்:**

1] தூக்கின்

**தொழிற்பெயர்:**

1] மறத்தல், 2] பொறுத்தல், 3] ஓரால், 4] பொறை, 5] ஆக்கல், 6] நீக்கல், 7] விளையாட்டு, 8] கண்ணோட்டம், 9] செல்லாமை, 10] உரைத்தல், 11] என்றல், 12] காத்தல், 13] ஈதல், 14] குற்றம், 15] மகிழ்ச்சி, 16] இழுக்கல், 17] ஒழுக்கம், 18] விடல், 19] தெளிதல், 20] கண்ணோட்டம், 21] பணிதல், 22] கற்றல், 23] பெறுதல், 24] வாழ்தல், 25] ஒழுக்கம், 26] சொலல், 27] துளங்குதல், 28] கொளல், 29] ஒழுகுதல், 30] நோன்றல், 31] பொறுத்தல், 32] வாழ்க்கை, 33] கூறல், 34] உதவி, 35] அற்றம், 36] மலர்தல், 37] தழீஇயது, 38] எள்ளாமை, 39]
தூக்கம், 40] இறப்பு, 41] ஒல்காமை, 42] மறப்பது – ( மறத்தல் என்னும் பொருள் தருவதால் ). 43] அவ்வதுறைவது, 44] அஞ்சல், 45] கோறல், 46] ஒழுக்கம், 47] இழுக்கம், 48] சொலல், 49] இடும்பை, 50] படுபாக்கு, 51] ஒழுகல், 52] ஒடுக்கம், 53] குத்து, 54] இய்றறுதல், 55]
இருக்கை, 56] களவு, 57] வாழ்க்கை, 58] துளங்குதல், 59] ஒழுகுதல், 60] ஆற்றுதல், 61] நோன்றல், 62] பொறுத்தல், 63] வாழ்தல்….

**முதனிலை தொழிற்பெயர்:**

1] கொதி, 2] இடி

**முதனிலை திரிந்த தொழிற்பெயர்:**

1] கோள்

**எதிர்மறை தொழிற்பெயர்:**

1] நீங்காமை, அஞ்சாமை,

**வினைமுற்று:**

முடிவு பெற்ற வினைச்சொல்லே வினைமுற்று ஆகும்.

1] படும், 2] கெடும், 3] எய்தினன்

**தெரிநிலை வினைமுற்று:**

ஒரு வினைமுற்றானது செய்பவன், கருவி, நிலம், செயல், காலம்,
செயப்படுபொருள் ஆகிய ஆறிணையும் வெளிப்படையாக உணர்த்தி வரும். ஒரு செயல் நடந்து முடிந்ததாக தெரியும்.

1] வந்தான், 2] வருகிறான், 3]வருவான்.

**குறிப்பு வினைமுற்று:**

திணை, பால் ஆகியவற்றை வெளிப்படையாகக் காட்டி காலத்தை மட்டும் குறிப்பாக உணர்த்தி வரும் வினைக்குறிப்பே குறிப்பு வினைமுற்று எனப்படும். இது காலத்தை (வெளிப்படையாக) காட்டாது.

1] நீர்த்து, 2] உடைத்து, 3] நன்று, 4] இல்லை, 5] வேறு, 6] இனிது, 7] உண்டு, 8] இன்று, 9] மருகனை, 10] உளன்.

**ஏவல் வினைமுற்று:**

முன்னிலையில் ஆணையிடுவதாக வரும் சொற்கள் ஏவல் வினைமுற்றுகள் எனப்படும்.

எடுத்துக்காட்டு:
நட, வா, போ – வெறும் பகுதி மாத்திரம்
தேற்றாய், வருதி – ஆய், இ விகுதியுடைச் சொற்கள்
உண்ணல், உண்ணேல், மறால், உண்ணாதி, உண்ணாதே –
அல், ஆல், ஏல், இ, ஏ விகுதியுடைச் சொற்கள்
பெறுமின், கூறுமின், உண்ணீர், உண்ணும் –
மின், ஈர், உம் – விகுதியுடைச் சொற்கள்.

**ஏவல் ஒருமை வினைமுற்று**

1] துறத்தி ( கைவிடுக ), 2] கேட்டி, 3] நீ நட, 4] நீ செய், 5] நீ போ, 6] நீ படி

**ஏவல் பன்மை வினைமுற்று**

1] ஓம்புமின், 2] சொல்லுமின், 3] காணீர், 4] உணர்மின், 5] நீர் உண்குவீர்
6] நீர் வாரீர், 7] நீர் செய்குதும்.

**தன்மை ஒருமை வினைமுற்று:**

1] உரைத்தனென், 2]இருந்தனென், 3] போற்றுகேன், 4] செய்கேன், 5] நோற்றிலேன், 6] யாத்திலேன், 7] பார்த்தனென், 8] தருகுவென், 9] என்கோ, 10] உணர்த்தினேன், 11] புக்கேன், 12] அளிக்குவேன், – இவையனைத்தும் தன்மையிடத்தைக் கூறும் தன்மை வினைமுற்றுகளாம்.

**தன்மைப் பன்மை வினைமுற்று:**

1] வாழ்த்துவம், 2] துய்ப்பேம், 3] பணிகுவாம், 4] தேர்ந்திலம், 5] அறிவாம், 6] தெரிதும், 7] ஆற்றுதும் – இவையனைத்தும் தன்மையிடத்தில் வரும் பன்மை வினைமுற்றுகள்.

**முன்னிலை வினைமுற்று:**

1] உயர்ந்தோய், 2] செறுத்தோய்,

**முன்னிலை ஒருமை வினைமுற்று:**

1] நிறைந்தனை, 2] ஒன்றினை, 3] தீர்ந்தனை, 4] சார்ந்தனை, 5] வாய்ந்தனை, 6] பூண்டனை, 7] ஊர்மதி, 8] காண்டி, 9] கொன்றனை, 10] பார்த்தனை, 11] செய்தாய், 12] குடித்தாய், 13] வருதி, 14] இசைத்தி, 15] கேட்டி, 16] கோடி, 17] காண்டி, 18] உரைத்தி, 19] கிடத்தி – இவையனைத்தும் முன்னிலை ஒருமை வினைமுற்றுகளாம்.

**முன்னிலைப் பன்மை வினைமுற்று:**

1] சென்றீர், 2] செல்வீர் – என்பனயாவும் முன்னிலைப் பன்மை வினைமுற்றுகளாம்.

**முன்னிலைப் பன்மை எதிர்மறை வினைமுற்று:**

1] ஆற்றீர், 2] அறியீர்,

**செய்யும் என்னும் வாய்ப்பாட்டு வினைமுற்று:**

1] ஒழுகப்படும், 2] உள்ளப்படும்,

**எதிர்மறை வினைமுற்று:**

1] தொழுகிலன், 2] காண்கிலர், 3] செய்யார், 4] வாழாதவர், 5] துறவார்.

எதிர்மறைப் பொருளை உணர்த்தும் வினைமுற்றுகளான – நேரா, கடவார், துஞ்சேல், நீங்கா, தெரிந்திலன், அறிகிலேன் – போன்றவை எதிர்மறை வினைமுற்றுகள எனப்படும்.

**பலர்பால் வினைமுற்று:**

1] என்ப, 2] பிற, 3] எய்துப,

**படர்க்கை வினைமுற்று:**

படர்க்கையிடத்தில் உள்ள அய்ந்து பால்களிலும் வருபவை படர்க்கை வினைமுற்றுகளாம்.

**வியங்கோள் வினைமுற்று:**

க-இய-இயர் என்ற விகுதிகளைப் பெற்று வரும்.
வாழ்த்துதல், வைதல், விதித்தல், வேண்டிக்கொடல் ஆகிய பொருள்களில் வரும்.இது மூன்று இடங்களையும் ஐம்பால் உணர்த்தி வரும்.

(எ.கா) வாழ்க, வாழிய, வாழியர், வாழ்த்துதல்
ஒழிக, கெடுக, வைதல், செல்க
வருக, ஈக, விதித்தல், தருக
வேண்டல், சிரிக்க, பார்க்க
1] கேட்க, 2] வாழ்க, 3] காக்க, 4] வருக, 5] தருக, 6] கெடுக, 7] செய்க, 8] புகுக, 9] வாழிய, 10] வாழியர்,

**அல் ஈற்று வியங்கோள் வினைமுற்று:**

1] விடல், 2] பொறுத்தல், 3] எள்ளல்,

**எதிர்மறை வியங்கோள் வினைமுற்று:**

1] மறவற்க, 2] துறவற்க,,

**உடன்பாட்டு வினைமுற்று:**

1] செய்வார், 2] வாழ்வார், 3] துறப்பார்

**ஆண்பால் வினைமுற்று:**

1] வந்தனன்

**எதிர்மறை ஆண்பால் வினைமுற்று:**

1] காணான்

**குறிப்பு வினைமுற்று:**

1] அன்று, 2] இல்லை, 3] நன்று, 4] உடையார், 5] இலர், 6] எளிய, 7] உடைத்து,

**அடுக்குத்தொடர்:**

ஒரே சொல் இருமுறை அடுக்கி வருவது அடுக்குத்தொடர் ஆகும். இது நான்கு சொற்கள் வரையிலும் அடுக்கி வரும். ஆனால் ஒரு சொல்லாக இருக்காது.

தனித்தனி சொல்லாக அடுக்கி 2,3,4 முறை வரை அடுக்கி வரும்.

பிரித்தால் தளித்தனியே நின்று பொருள் தரும்

அச்சம், விரைவு, அவலம் , உவகை, வெகுளி ஆகிய இடங்களில் வரும்.

1] வாழிய வாழிய, 2] தினந்தினம், 3] யார்யார், 4] புடை புடை, 5] அறைந்தறைந்து, 6] நன்று நன்று,

**இரட்டைக்கிளவி:**

(கிளவி – சொல் என்று பொருள்)
பொருள் இல்லாத ஒரே சொல் இருமுறை அடுக்கி இரட்டைச் சொற்களாக வருவதற்கு இரட்டைக்கிளவி என்று பெயர்.

இரண்டு இரண்டாக சேர்ந்து வரும்.

பிரித்தால் பொருள் தராது.

ஒலிக்குறிப்பு, நிறம் முதலான காரணங்களில் இரண்டு இரண்டாக வரும்.

1] தணதண, 2] சலசல, 3] படபட, 4] கலகல , 5] குறுகுறு,

**வேற்றுமைத்தொகை :**

வேற்றுமை உருபுகள்:
1] முதல் வேற்றுமை உருபு = இல்லை (எழுவாய் வேற்றுமை)
2] இரண்டாம் வேற்றுமை உருபு = ‘ஐ’

3] மூன்றாம் வேற்றுமை உருபு = ‘ஆல்’
4] நான்காம் வேற்றுமை உருபு = ‘கு’
5] ஐந்தாம் வேற்றுமை உருபு = ‘இன்’
6] ஆறாம் வேற்றுமை உருபு = ‘அது’
7] ஏழாம் வேற்றுமை உருபு = ‘கண்’
8] எட்டாம் வேற்றுமை உருபு = இல்லை(விளி வேற்றுமை).

**முதல் வேற்றுமை**

1] பால் பருகினான் -(பால்+ஐ+பருகினான்- ஐ என்ற இரண்டாம் வேற்றுமை உருபு மறைந்து வந்துள்ளது)

2] கை தொழுதான் -(கை+ஆல்+தொழுதான்- ஆல் என்ற மூன்றாம் வேற்றுமை உருபு மறைந்து வந்துள்ளது)

3] கூலி வேலை – (கூலி+கு+வேலை- கு என்ற நான்காம் வேற்றுமை உருபு மறைந்து வந்துள்ளது)

4] ஊர் நீங்கினான் -(ஊர்+இன்+நீங்கினான்- இன் என்ற ஐந்தாம் வேற்றுமை உருபு மறைந்து வந்துள்ளது)

5] முருகன் சட்டை -(முருகன்+அது+ சட்டை – அது என்ற ஆறாம் வேற்றுமை உருபு மறைந்து வந்துள்ளது)

6] குகைப்புலி – (குகை + கண்+ புலி – கண் என்ற ஏழாம் வேற்றுமை உருபு மறைந்து வந்துள்ளது)

**1.முதலாம் வேற்றுமைத் தொகை:**

பொருளின் இயல்பான பெயரே முதல் வேற்றுமை தொகை. இதற்கு உருபு
இல்லை.

இதன் வேறு பெயர்கள்:

அ. எழுவாய் வேற்றுமை
ஆ. பெயர் வேற்றுமை

(எ.கா) கந்தன் வந்தான்
ராமன் வந்தான்

**இரண்டாம் வேற்றுமை தொகை:**

1] குடத்தை வனைந்தான் – ஆக்கப்படுபொருள்.

2] கோட்டையை இடித்தான் – அழிக்கப்படு பொருள்.

3] ஊரை அடைந்தான் – அடையப்படு பொருள்

4] வீட்டை விட்டான் – நீக்கப்படு பொருள்

5] புலியைப் போன்றான் – ஒத்தல் பொருள்

6] பொன்னை உடையான் – உடைமைப் பொருள்.

1] அடிவாழ்த்துவம், 2] நூல்நோக்கி, 3] அறனறிந்து, 4] திறனறிந்து, 5] பகைகொளல், 6] இருளறுக்கும், 7] அறதீனும், 8] கால்மடித்து, 9] வால்குழைத்து, 10] உயிர்செகுத்து, 11] கோல்நோக்கி, 12] தாள்தலை, 13] புல்லார், 14] நன்றி மறப்பது, 15] நிற்பிரிந்த, 16] மதி யெறிந்து,
17] வாநெறிந்து, 18] களம்கண்டோம்,,

**இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை:**

1] போர்க்குகன், 2] நீர்முகில், 3] திரைக்கங்கை, 4] நீர்த்தடம், 5] வரிஉழுவை, 6] கவையடிக்கேழல், 7] வள்ளுகிர்ப்புலி, 8] கொலைப்புலி 9] தார்வேந்தன், 10] கழற்கால், 11] சிறைப்பறவை, 12] முள்ளிலை, 13] வேர்காளை – ( காளை – தலைவன் ), 14] வளைக்கை, 15] வண்ண
மோதிரம், 16] படைப்பரசுராமன், 17] வாள்வேந்தன், 18] எழுகலிங்கம், 19] கடற்கலிங்கம், 20] வரைக்கலிங்கம், 21] இலைபொழில்,,

**மூன்றாம் வேற்றுமைத்தொகை (ஆல்) – (ஓடு)**

பேனா எழுதினான்
(ஆல்) – பேனாவால் எழுதினான்
தலையால் வணங்கினான்
மரம் வாளால் அறுபட்டது
புலவரால் பாடப்பட்ட பாட்டு.

1] பொலம்புனை ( பொன்னினால் செய்த )

**மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை :**

1] பொற்சிலம்பு, 2] பொலங்குழை,

**நான்காம் வேற்றுமை: கு**

**நான்காம் வேற்றுமைக்குரிய பொருள்:**

1] கபிலருக்குப் பொன் கொடுத்தான் — கொடை
2] பிணிக்கு மருந்து — பகை
3] அருங்கலம் உலகின் மிக்க அரசர்க்கே உரிய – தகுதி
4] ஆடைக்கு நூல் –அதுவாதல்
5] கூலிக்கு வேலை — பொருட்டு
6] தந்தைக்கு மகன் — முறை

பொருட்டு, நிமித்தம், ஆக என்பன நான்காம் வேற்றுமைக்குரிய சொல்லுருபுகளாகும். சான்று:

கூலியின் பொருட்டு வேலை செய்தான்
கூலியின் நிமித்தம் வேலை செய்தான்
கூலிக்காக வேலை செய்தான்.

**நான்காம் வேற்றுமைத்தொகை:**
1] கண்ணிபாலன், 2] இலங்கைவேந்தன், 3] என்மகள்,

**நான்காம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை:**

1] வினைத்திட்பம்,

**ஐந்தாம் வேற்றுமை:**
ஐந்தாம் வேற்றுமை என்பது இப்பொருள் இத்தன்மையானது என்னும் பொருண்மையை உணர்த்துவது ஆகும். ஐந்தாம் வேற்றுமை உருபு இன், இல் ஆகும். இவ்வுருபு தன்னை ஏற்ற பெயர்ச் சொல்லின் பொருளை நான்கு வகையாக வேறுபடுத்தும்.

ஐந்தாம் வேற்றுமை உணர்த்தும் பொருள்கள்:
சான்று:-

1.நீங்கல்
மலையின் வீழருவி.

2. ஒப்பு
காக்கையின் கரிது களம்பழம்.
பாலின் வெளிது கொக்கு.

3. எல்லை:
மதுரையின் வடக்கே தில்லை
குடந்தையின் கிழக்கு புகார்.

4. ஏது
கல்வியில் பெரியவர் கம்பர்
செல்வத்தில் சிறந்தது கல்வி.

நீக்கப் பொருளிலும் எல்லைப் பொருளிலும் இல், இன் என்ற உருபுகளின் மேல் , நின்று, இருந்து என்பவை சில இடங்களில் சொல்லுருபுகளாய் வரும் .

**ஆறாம் வேற்றுமை: அது**

ஆறாம் வேற்றுமை என்பது பெயரின் எழுவாய்ப் பொருளைக் கிழமைப் பொருளாக (உரிமை)வேற்றுமைப் படுத்துவது ஆகும். கிழமைப் பொருள் தற்கிழமை , பிறிதின் கிழமை என இரு பொருளில் வரும்.

சொல்லுருபு:
ஆறாம் வேற்றுமைக்குரிய சொல்லுருபு உடைய என்பதாகும். இச் சொல்லுருபு ஒருமை, பன்மை ஆகிய இரண்டிற்கும் வரும்.

என்னுடைய வீடு
அவர்களுடைய வீடு

**ஆறாம் வேற்றுமைத்தொகை:**
1] கயன்முள், 2] தன் ஒன்னார், 3] வேந்தன் பொருள், 4] செறுநர் செருக்கு, 5] நதிப்பரப்பு, 6] பழச்சுவை, 7] உயிர்த்திரள், 8] இறவுப்புறம், 9] சுறவுக்கோடு, 10] களிற்றுமருப்பு, 11] அறிவார்தொழில், 12] மனத்திட்பம், 13] புல்நுனி, 14] கைவயம், 15] மெய்வயம், 16]
சிலைத்தொழில்,

**ஏழாம் வேற்றுமை: கண்**
ஏழாம் வேற்றுமை என்பது தமிழில் பெயர்ச்சொல்லைத் தொடர்பு கொண்டு வழங்கும் ஓர் இலக்கணக் கூறு. இது “இட வேற்றுமை” என்று வழங்கப்படுகிறது. அதாவது தொழில் அல்லது வினை நிகழும் இடத்தைக் குறிப்பது. இடத்தோடு காலத்தையும் குறிப்பிடும்.

“முருகன் வள்ளியைக் கடையில் பார்த்தான்” என்னும் கூற்றில் கடையில் என்னும் சொல்லில் உள்ள இல் என்பது இடத்தைக் குறிக்கும் ஏழாம் வேற்றுமை. அது போலவே, “முருகன் வள்ளியை அரைநொடியில் கண்டுபிடித்துவிட்டான்” என்று கூறும்பொழுது “அரைநொடியில்” என்னும் சொல்லில் வரும் இல் காலத்தைக் குறிக்கின்றது.

இந்த ஏழாம் வேற்றுமையின் பொருளானது பொருள்,இடம், காலம், சினை, குணம், தொழில் என்னும் ஆறுவகைப் பெயர்களுக்கும்; தற்கிழமை, பிறிதின் கிழமை என்ற இரண்டு வகைக் கிழமைப் பொருள்களுக்கும் இடமாக நிற்றலாகும் (கிழமை = உரிமை).
இவ்வேற்றுமை
இடப்பொருளையே உணர்த்தும்.

**ஏழாம் வேற்றுமைத்தொகை:**
1] தற்பிறர், 2] பகலுறை, 3] வினைத்திட்பம், 4] கையேந்தி, 5] இற்பிறப்பு, 6] செவிபுக,

**ஏழாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை:**
1] காற்சிலம்பு, 2] போர்முரசம், 3] கானப்பறவை, 4] கானப்பறவை

**பெயரெச்சம்:**

பெயரெச்சம் என்பது பெயர்ச்சொல்லை ஏற்று முடிவு பெறும் எச்சவினைச்சொல் ஆகும். அப்பெயரெச்சம் இருவகைப்படும். அவை

*] தெரிநிலை பெயரெச்சம்
*] குறிப்புப் பெயரெச்சம்

**பெயரெச்சம் இலக்கணக்குறிப்பு:**
1] தேய்ந்த, 2] பாய்ந்த, 3] ஆய்ந்த, 4] காய்ந்த, 5] ஆன்ற பெருமை, 6] படித்த விரகன், 7] தீர்த்த செழியன், 8] வியர்த்த வியர்வன்றோ, 9] இழிந்த பிறப்பு, 10] தாழ்ந்த, 11] தளர்ந்த, 12] இருந்த வள்ளல், 13] அமைந்த காதல், 14] மலர்ந்த கண்ணன், 15] சென்ற வட்டி, 16] அணைந்த வாகீசர், 17] உற்ற நோய், 18] வந்த பொருள், 19] காழ்ப்ப இயற்றியார், 20] படர்ந்த தெண்டிரை, 21] 22] முதிர்ந்த மேதி, 23] பொதிந்த மெய், 24] நின்ற வேங்கை, 25] வாழும் குடி, 26] இருந்த சோகை, 27] அசைத்த மொழி, 28] இசைத்த, 29] கொன்ற, 30] பொன்றும்,
31] உணர்ந்த முதல்வன், 32] எய்த்த மேனி, 33] சுற்றிய பாங்கர், 34] செற்ற சிலை, 35] விட்டவாள், 36] ஈன்ற தந்தை, 37] இழந்த பரிசு, 38] முழங்கிய சேதி, 39] கொடுத்த புகழ், 40] கேட்ட வாசகம், 41] இரிந்த பாலன், 42] பறித்த மயிர்,

**1] தெரிநிலைப் பெயரெச்சம்:**

காலத்தை வெளிப்படையாகக் காட்டி, அச்சொல் முடியாமல் நின்று,
பெயர்ச்சொற்களைக் கொண்டு முடிந்தால் அது தெரிநிலைப் பெயரெச்சமாகும். இது மூன்று காலங்களிலும் வரும்.

(எ.கா) படித்த மாணவன்
படிக்கின்ற மாணவன்
படிக்கும் மாணவன்.

**2] குறிப்புப் பெயரெச்சம்**

காலத்தை வெளிப்படையாகக் காட்டாமல், ஒரு செயலை உணர்த்தாமல், பண்பினை மட்டும் உணர்த்தி பெயர்ச்சொல்லாக முடிந்தால் அதுவே குறிப்பு பெயரெச்சம் எனப்படுகிறது.

(எ.கா.) நல்ல பையன்
கரிய உருவம்
இனிய நண்ப
கதத்த
நல்ல மாணவன்
அரிய ஆண்மை ..

**3] எதிர்மறைப் பெயரெச்சம்**

1] பாடாத, 2] பறவாத, 3] சூடாத, 4] பாடாத பைங்கிளி, 5] கேட்காத செவி, 6] பேசாத பெண்.

சொற்களை வாசித்தாலே எதிர்மறை என எளிதாக அறியலாம்..

**4] ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்**

ஈற்றெழுத்து கெட்டுவரும் எதிர்மறைப்பெயரெச்சம் ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சமாகும். “ஆ” எனும் விகுதியில் முடியும்.

1] அலகிலா விளையாட்டு, 2] கல்லா ஒருவற்கும், 3] தேராக்கீரன், 4] கேளாத்தகையவே, 5] எதிரிலாக்கவி, 6] குறையாவன்கண், 7] துவ்வாவிடம், 8] பொல்லாக்காட்சி, 9] கொல்லா நலத்தது, 10] எய்தாப்பழி, 11] பழியில்லா மன்னா, 12] படாரப்பஞ்சவ, 13] அடங்காப்பசுந்துணி,
14] தேராமன்னா, 15] ஏசாச் சிறப்பின், 16] கூவா, 17] செலவொழியா வழி, 18] பொய்யா விளக்கம், 19] வாராப் பொருளாக்கம், 20] மீளா ஆள், 21] நீங்காப் பூரணமாய், 22] வரையா மரபு, 23] அவிழாக் கோட்டுகிர், 24] நிரம்பா நீளிடை, 25] உண்ணா உயக்கம், 26] இன்னாச்
சொல், 27] அழிக்கலாகா, 28] எற்றா, 29] கதுவிடா,,,

**செய்யும் என்னும் வாய்ப்பாட்டு பெயரெச்சம்:**
1] தூற்றும்குடி, 2] தூங்கும் பதி, 3] பொருவுங்குடை, 4] வரும் பெருமாள், 5] தாவும் கண், 6] தரும் பொருளே, 7] பெருகும் இன்பம்,

**இறந்த காலப் பெயரெச்சம்:**
1] செய்த, 2] ஈன்ற குழவி,,

**வினைத்தொகை:**
மூன்று காலத்திற்கும் பொருந்தி பெயர்ச்சொல்லால் தழுவப்பெற்று வரும் தொடரே வினைத்தொகை ஆகும்.

(எ-கா)
“சுடுசோறு” -
சுடுகின்ற சோறு (நிகழ்காலம்)
சுட்ட சோறு (இறந்தகாலம்)
சுடும் சோறு (எதிர்காலம்).

இதே போல வீசுதென்றல் என்னும் பொழுது வீசுகின்ற தென்றல் (தெற்கு நோக்கி மென்மையாக வீசும் காற்று), வீசிய தென்றல் , வீசும் தென்றல் என்று முக்கால வினையையும் குறிக்கும்.

1] திரைகவுள், 2] புனைமலர், 3] உயர்துலை, 4] வாங்குவில், 5] பயன்தெரிபுலவர், 6] ஆழ்நரகு, 7] செய்தவம், 8] வீழ்கதிர், 9] உகுநீர், 10] சூழ்கழல், 11] செய்கொல்லன், 12] செய்வினை, 13] பொங்குகடல், 14] ஈன்குழவி, 15] பொழிதருமணி, 16] பணைதருபருமணி, 17]

வருபுனல், 18] நிதிதருகவிகை, 19] உரைகாலம், 20] மருவுசெய், 21] அறுகுளம், 22] அகல்வயல், 23] ஓங்குமலை, 24] நீளிடை, 25] இழையணி, 26] திரைகவுள், 27] உயர்சினை, 28] ஒழுகுநீர், 29] புனைகலம், 30] திருந்துமொழி, 31] பொருந்துமொழி, 32] ஈர்வளை, 33] உண்கண்,
34] நிறைமதி, 35] மொய்கழல், 36] அலைகடல், 37] வீங்குநீர், 38] களிநடம் ( ஆனந்த நடனம் ), 39] விரிநகர், 40] செய்குன்று, 41] ஆடரங்கு, 42] அகில்முகில், 43] மயங்கி, 44] பிணங்கி, 45] இணங்கி, 46] வணங்கி, 47] உயங்கி, 48] உயரண்டம், 49] மதம் பொழிகரி, 50] பொழிமரை,,

**பண்புத்தொகை:**

பண்புத்தொகை என்பது பண்புப்பெயரைச் சேர்ந்து (தொகுத்து) வரும் பெயர்ச்சொல். ஒரு பண்பைக் குறிப்பது பண்புப்பெயர். எடுத்துக்காட்டாக,

நிறத்தைக் குறிக்கும் பண்புப்பெயர்ச் சொற்கள் – செம்மை, பசுமை, வெண்மை, கருமை.

வடிவத்தைக் குறிக்குஞ் சொற்கள் – வட்டம், சதுரம்.

சுவையைக் குறிக்குஞ் சொற்கள் – இனிமை, கசப்பு.

குணத்தைக் குறிக்குஞ் சொற்கள் – நன்மை, தீமை.

எண்ணிக்கையைக் குறிக்குஞ் சொற்கள் – ஒன்று, இரண்டு, பத்து என்று பல்வேறு வகையான பண்புப்பெயருடன் சேர்ந்து வரும் பெயர்ச்சொல் பண்புத்தொகை எனப்படும்.

1] கூர்ம்படை, 2] கடுந்திறல், 3] நீலமுடி, 4] நன்செய், 5] செந்தீ, 6] நெடுமதில், 7] கருமுகில், 8] வெண்மதி, 9] செந்நாய், 10] நல்லறம், 11] கடுஞ்சொல், 12] பல்லுயிர், 13] நல்வினை, 14] தீவினை, 15] அருந்தவர், 16] பழந்தமிழ், 17] சிற்றினம், 18] நெடுநீர், 19] புன்கண், 20]
நெடுநாவாய், 21] நெடுநீர், 22] நன்னுதல், 23] புன்கண், 24] மென்கண், 25] அருவிலை, 26] நன்கலம், 27] நர்கறிகள், 28] இன்னமுதம், 29] ஒண்பொருள், 30] எண்பொருள், 31] நற்சங்கு, 32] வெண்குழை, 33] பெருவரி, 34] தண்டளி, 35] தொல்கவின், 36] நன்மனை, 37] நன்மான்,
38] பைந்நினம், 39] வெஞ்சினம், 40] தீநெறி, 41] தெண்டிரை, 42] பெருந்தடந்தோள்,,

**இருபெயரொட்டுப் பண்புத்தொகை:**

இருபெயரொட்டுப் பண்புத்தொகை பண்புப் பெயர் இடம் பெறாத பண்புத் தொகை ஆகும். பண்புப் பெயர்ச் சொற்களுடன் வேறு சொற்கள் சேர்ந்து வந்து ஆகிய எனும் சொல் மறைந்து வருவது பண்புத் தொகை எனப்படும். இருபெயரொட்டுப் பண்புத்தொகை என்பது பொதுப்
பெயரோடு சிறப்புப் பெயரோ, சிறப்புப் பெயரோடு பொதுப் பெயரோ சேர்ந்தமைந்து ஒரு பொருளை உணர்த்துவதாகும். பண்புத் தொகை போல இங்கும் “ஆகிய” எனும் சொல் மறைந்து நிற்கும். சிறப்புப் பெயர்ச் சொற்கள் பண்புப் பெயர்ச் சொற்கள் ஆகாவிடினும் பண்புத் தொகை போல “ஆகிய” எனுஞ்சொல் மறைந்து நிற்றலால் இது இருபெயரொட்டுப் பண்புத் தொகை எனப்பட்டது.

எடுத்துக்காட்டுகள்:

பலா மரம் – பலா என்பது சிறப்புப் பெயர்ச் சொல், மரம் என்பது பொதுப் பெயர்ச் சொல் (பலாவாகிய மரம் – ஆகிய மறைந்து வந்தது)
சாரைப்பாம்பு – சாரையாகிய பாம்பு.

1] கணிச்சிக்கூர்ம்படை, 2] மெய்ப்பொருள், 3] சுவர்க்கபதி, 4] கைத்தலம்,,,

**உம்மைத்தொகை :**

கொடுக்கப் பட்டுள்ள சொற்களில் ‘உம்’ எனும் சொல் வெளிப்படையாக தெரியாமல் மறைந்து வந்தால் அது உம்மைத்தொகை எனப்படும். (எ.கா)
அவன் இவன்
இரவு பகல்
இராப் பகல்
எனவே ‘உம்’ எனும் சொல் வெளிப்படையாக வந்தால் அது எண்ணும்மை ஆகும். அதுவே மறைந்து வந்தால் அது உம்மைத்தொகை.

கபில பரணர் வந்தார். இது கபிலரும் பரணரும் வந்தார்கள் என்று விரியும். உம் எனும் இடைச் சொல் மறைந்திருப்பது உம்மைத் தொகை. “உம்’ வெளிப்பட்டு நின்றால் அது விரி.

புலிப் பாய்ச்சல் புலியைப் போன்ற பாய்ச்சல் என்று பொருள் தரும். போன்ற எனும் உவமை உரு, மறைந்திருப்பதால் இது உவமைத் தொகை. தாமரை முகம் எனில் தாமரை போன்ற முகம் போன்ற எனும் உவமை உருபு மறைந்திருப்பதால் உவமைத் தொகை.

1] அடவிமலையாறு, 2] நாடுநகர், 3] தாய்தந்தை, 4] சிரமுகம் ( சிரமும் முகமும் ), 4] பேர் அடையாளம், 5] நான் அவன்,,,

**எண்ணும்மை:**

கொடுக்கப் பட்டுள்ள சொற்களில் ‘உம்’ எனும் விகுதி வெளிப்படையாக வருமாயின் அது எண்ணும்மை எனப்படும்.
(எ.கா)
அல்லும் பகலும்
காதலும் கற்பும்
அவனும் இவனும்
சிறப்பு எண்ணும்மை
சொற்கள் “உடனும்” என முடியும்.
(எ.கா) வானுடனும், கடவுளுடனும்
உயர்வு சிறப்பும்மை
சொற்கள் “னினும்” என்று முடியும்.
(எ.கா) வானினும், ஊனினும், தேனினும்,

1] பாலாடையும், 2] நறுநெய்யும் தேனும், 3] தாளமும் மேளமும், 4] அவியினும் வாழினும், 5] கருமுகிலும் வெண்மதியும், 6] தேவியும் ஆயமும், 7] அன்பும் ஆர்வமும் அடக்கமும், 8] மாடும் ஆடும், 9] தேனும் மீனும், 10] பொன்னும் துகிரும் முத்தும், 11] பவளமும் மணியும், 12] காலமும் தேசமும், 13] வையகமும் வானகமும், 14] மலர்தலும் கூம்பலும், 15] வாயிலும் மாளிகையும், 16] மாடமும் ஆடரங்கும், 17] கங்கையும் சிந்துவும்,,,

**முற்றும்மை :**

1] யாவையும், 2] யாரையும், 3] யாரும், 4] எழுபிறப்பும், 5] யார்க்கும், 6] எம்மருங்கும்,,

**இழிவு சிறப்பும்மை:**

1] செய்யினும், 2] குருகும், 3] வயிற்றுக்கும், 4] செயினும்,,,

**உயர்வு சிறப்பும்மை:**

1] நிலத்தினும், 2] வானினும், 3] நீரினும், 4] பாறையும்,,

**உருவகம் :**

உவமைத்தொகையை நன்றாகப் புரிந்து கொண்டீர்கள் என்றால் உருவகத்தை புரிந்து கொள்வது மிகச் சுலபம்.
அதாவது ‘மலரடி’ என்ற சொல் உவமைத்தொகை என்பதைப் பார்த்தோம்.
அச்சொல்லை திருப்பி எழுதினால் அது உருவகம்.

‘மலரடி’ என்றசொல்லை ‘அடிமலர்’ என்று மாற்றியமைக்கும் போது உருவகம் ஆகிறது.

விளக்கம்:

ஒரு பெண்ணின் முகத்தை பார்க்கிறீர்கள். உடனே மலரைப் போன்ற முகம் என மலருடன் அவளது முகத்தை ஒப்பிடுகிறீர்கள். இதுவே ‘மலர்முகம்’ இது உவமைத்தொகை.

இன்னும் ஒருபடி மேலேபோய், மலரைப் போன்று முகமில்லை. இவள் முகத்தைப் போலத்தான் அம்மலர் இருக்கிறது என்று சொல்வீர்களானால் அது உருவகம் அதாவது முகமலர்.

இரண்டுக்குமான வித்தியாசத்தை தெரிந்து கொண்டீர்களா?

எடுத்துக்காட்டு:

| **உவமைத்தொகை** | – | **உருவகம்** |
|---|---|---|
| மலர்முகம் | – | முகமலர் |
| மலர்க்கை | – | கைமலர் |

தாய்மொழி – மொழித்தாய்
கயல்விழி – விழிகயல்
அன்னைத்தமிழ் – தமிழன்னை.
மலர்விழி - விழிமலர் .

1] பதமலர் 2] மருப்பூசி, 3] மார்போலை, 4] காமத்தீ, 5] இன்பசொரூபம், 6] மனக்குரங்கு, 7] கரகமலம், 8] செல்வச்செவிலி, 9] கண்ணீர் வெள்ளம், 10] பசிக்கயிறு, 11] பம்பரம், 12] மெல்லியகாம்பு, 13] சிறுவிரல், 14] தீக்குச்சிகள், 15] கண்ணின் நீர்க்கடல்,

**உவமைத்தொகை:**

பொருளுக்கும் உவமைக்குமிடையே போன்ற, போல, அன்ன, நிகர, போன்ற உவம உருபுகள் மறைந்து வருமாயின் அவை உவமைத்தொகை எனப்படும்..

(எ.கா) கனிவாய், மலரடி

'கனிவாய்' என்ற சொல்லிற்கு பொருள் கனி போன்ற வாய் என்பதாகும். அப்படியானல் 'போன்ற' என்ற உருபு மறைந்து வருவதைக் காணலாம்.
எனவே 'கனிவாய்' என்பது உவமைத்தொகை ஆகும்.

அதேபோல 'மலரடி' என்பதன் பொருள் மலர் போன்ற பாதம் என்பதாகும். இதிலும் 'போன்ற' என்ற உருபு மறைந்து வருகிறது.
பெரும்பாலும் 'போன்ற' என்ற உருபு மறைந்து வரும் படியே வினாக்கள் அமையும்.

எ.கா 1] இலைவேல், 2] தலிர்க்கை, 3] கல்திரல்தோள், 4] தாமரைநயனம் , 5] மலர்ச்சேவடி, 6] பூதரப்புயம், 7] மலரடி, 8] பொன்னடி, 9] தாமரைக்கண்கள் , 10] மலர்ப்பாதம், 11] மதிமுகம், 12] கயனெடுங்கன், 13] பவளச்செவ்வாய், 14] எரிமலர், 15] வேற்கண்ணாள், 16] மலர்முகம், 17] மலர்விழி, 18] மலர்க்கை, 19] தாய்மொழி, 20] கயல்விழி, 21] அன்னைத்தமிழ்,,,

**உரிச்சொல்தொடர்:**

ஒன்றை பெரிது படுத்திக் காட்டுவது உரிச்சொற்றொடர் ஆகும்.

(எ.கா)
மாநகரம்

அதாவது பெரிய நகரம் என்று சொல்வதற்கு பதிலாக மாநகரம் என்று சொல்கிறோம். இதுவே உரிச்சொற்றொடர் ஆகும்.
கீழே கொடுக்கப் பட்டுள்ளவற்றை மனதில் படித்துக் கொள்ளவும்.
1.சால
2.உறு
3.தவ
4.நனி
5.கூர்
6.கழி
7.கடி
8.மா
9.தட
மேற்கண்டவை அனைத்தும் 'பெரிய' என்ற பொருளைத் தரக் கூடிய சொற்கள். எனவே கேட்கப்படும் உரிச்சொற்றொடர்கள் இவற்றில் ஏதாவது ஒன்றில் தான் ஆரம்பிக்கும்..
(எ.கா)
1] தடக்கை, 2] தவப்பயன், 3] உறுபடை, 4] மாநகர், 5] மாஞாலம், 6] தடந்தோள், 7] மல்லல் நெடுமதில், 8] இருநிலம், 9] தடக்கை, 10] மாதவர், 11] நடிகனிது, 12] மாமலை, 13] உறுவேனில், 14] மல்லலம் குருத்து, 15] தடக்கரி, 16] நனிமனம், 17] விழுப்பொருள், 18] கடிமகள்,
19] வைவேல், 20] மாமதுரை, 21] மல்லல் மதுரை, 22] தடந்தோள், 23] மாமணி, 24] நாமவேல்,,

**அளபெடை**

**அளபெடை**
ஓர் செய்யுளில் ஓசை குறையும் போது அந்த இடத்திலுள்ள எழுத்தோடு அதன் இணை எழுத்தையும் சேர்த்து ஓசையை நிறைவு செய்வர். இதற்கு அளபெடை என்று பெயர். அளபெடை இரு வகைப்படும்.
அ.உயிரளபெடை

ஆ.ஒற்றளபெடை

**1.உயிரளபெடை**

உயிரெழுத்தைத் கொண்டு ஓசையை நிறைவு செய்தால் அது உயிரளபெடை யாகும்.
*] செய்யுளிசையளபெடை
*] இன்னிசையளபெடை.
*] சொல்லியைளபெடை
என இது 3 வகைப்படும்.

**செய்யுளிசையளபெடை**

செய்யுளில் ஓசை குறையும் போது அவ்வோசையை நிறைவு செய்ய சொல்லின் முதல், இடை, இறுதியில் உயிர்நெடில் எழுத்துக்கள் அளபெடுத்து வருவது செய்யுளிசையளபெடை என்பதாகும். இதன் வேறுபெயர் இசை நிறையளபெடை.
(எ.கா) தொழாஅர்
உழாஅர்
நல்லபடாஅ
ஆதூம்(ஆஅதூம்)
ஓஒதல்
நடுவொரீஇ
தூஉம், தொழூஉம், தரூஉம், வெரூஉம், படா அர், கடா அ, சா அய், உறாஅமை, படு உம்,,,
**சொல்லிசையளபெடை**

செய்யுளில் ஓசை குறையாத இடத்தும் பெயர்ச் சொல்லை வினையெச்சசொல்லாக மாற்றும் பொருட்டு அளபெடுத்து வருவதே சொல்லிசையளபெடை என்பதாகும்.
(எ.கா) 1] குடிதழீஇ, 2] அடிதழீஇ, 3] உரனசைஇ, 4] நிறீ இ, 5] தழீ இய, 6] செலீ இய, 7] ஓரீ இ, 8] எழீ இ,,,

**இன்னிசையளபெடை**

செய்யுளில் ஓசை குறையாத போதும் செவிக்கு இனிய ஓசை தரும் பொருட்டு உயிர்குறில் நெடிலாகி மேலும் அளபெடுத்து வருவது இன்னிசையளபெடை ஆகும்
(எ.கா) உண்பதூஉம்
கொடுப்பதூஉம்
உடுப்பதூஉம், தாங்கு றுவூம், வளர்க்குறூஉம், , ,

**ஒற்றளபெடை**

செய்யுளில் ஓசை குறையும் போது அவ்வோசையை நிறைவு செய்யும் பொருட்டு சொல்லில் மெய்யெழுத்து அளபெடுத்து வருவதே ஒற்றளபெடை என்பதாகும். இதில் ஆய்த எழுத்தும் அளபெடுத்து வரும்.
(எ.கா) கண்ண்கருவினை
கலங்ங்குநெஞ்சமில்லை
இலஃஃகுமுத்தின்
மடங்ங்கலந்த, அரங்ங்கம்,,,,,

**உவமையாகு பெயர்:**

1] காளை, 2] பாவை, 3] கோதை,,,

**ஆகுபெயர்:**

1] நாழி, 2] உள்ளம், 3] தரை,,,

**செயவென் வாய்ப்பாட்டு வினையெச்சம் :**

1] இரட்ட, 2] நிழற்ற, 3] கவிப்ப, 4] தெருள, 5] உளற, 6] உடைந்தனர்,

**அன்மொழித்தொகை:**

1] சிறுநுதல், 2] செவ்வாய், 3] கமழ ஓதி,,,

**பண்புப்பெயர்:**

1] இன்மை, 2] திண்மை, 3] கேண்மை, 4] தூய்மை, 5] சால்பு, ,,,

**அசைச்சொற்கள்:**

1] மன் , 2] ஓ,,,,

**ஈற்றுபோலி:**

1] அரண், 2] திறன்,,

**அண்மை விழி:**

1] நாட, 2] சேர்ப்ப, 3] ஐய, 4] எந்தாய்,,,

**உவம உருபு:**

1] மருள், 2] தூண்டலாமென, 3] ஒப்ப, 4] அன்ன,

**இடவாகுபெயர்:**

1] உலகம்,,

**ஒருபொருட் பன்மொழி:**

1] வல்விரைந்து,, 2] சொற்பதம்,, 3] ஓங்கியுயர்,

**முற்றெச்சம்:**

1] தொடர்ந்தனன், 2] நகைப்பான்,,

**பண்புத்தொகை புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை:**

1] திண்டிறல் நோக்கினான்,, 2] அஞ்சிலோதியை வர,,,

**ஒன்றன் பால் குறிப்பு வினை முற்று:**

1] அரிது, 2] பெரிது, 3] வரைத்து,,,

**மேலும் சில இலக்கணக் குறிப்புகள் :**

1] இலக்கணப் போலி – கண்ணுதல்.
2] உம்பி – முறைப்பெயர்.
3] தமை – இடைக்குறை.
4] ஊற்றுக்கோல் – ஊன்றுகோல் என்பதன் வலித்தல் விகாரம்.
5] கொல் – இடைச்சொல் ஐயப்பொருளில் வந்தது.
6] அம்மா – வியப்பிடைச்சொல்.
7] மாசை ஏற்றி – இரண்டாம் வேற்றுமை விரி.